கடலூரில் பறவைக் காய்ச்சல் பாதிப்பு எதிரொலி

# நாமக்கல் கோழிப் பண்ணைகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரம்

**நாமக்கல், நவ. 14:** கடலூரில் கறிக்கோழிகளுக்கு ஏற்பட்ட பறவைக் காய்ச்சல் (ஹெச்5என்1) பாதிப்பால், நாமக்கல் மண்டல கோழிப்பண்ணைகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியத்திற்கு உள்பட்ட தியாகவள்ளி, தமனம்பட்டி, கட்டியங்குப்பம், குள்ளஞ்சாவடி சுற்றுவட்டார கிராமங்களில் கூண்டு இல்லாமல் தரையில் வைத்து வளர்க்கும் கறிக்கோழி வளர்ப்பு முதன்மை தொழிலாக உள்ளது. சில தினங்களுக்கு முன்பு அங்குள்ள கறிக்கோழிகள் உயிரிழந்தன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோழிகள் உயிரிழந்ததால் அவற்றை குழிதோண்டி புதைத்தனர்.

இறந்த கோழிகளை மத்திய பிரதேச மாநிலம், போபால் ஆய்வுக் கூடத்துக்கும், நாமக்கல் மற்றும் இதர கால்நடை பரிசோதனை கூடங்களுக்கும் அனுப்பிவைத்தனர். பரிசோதனை முடிவில், கோழிகள் இறப்புக்கு வீரியமிக்க பறவைக் காய்ச்சல்தான் காரணம் என்பது தெரியவந்துள்ளது.

இதனால், கடலூர் மாவட்டத்திற்கு உள்பட்ட பகுதிகளில் கறிக்கோழிகளை விற்பனை செய்யவும், புதிய கோழிக் குஞ்சுகளை வளர்ப்புக்கு வாங்கவும் 3 மாதங்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. மேலும் நோய் பாதிப்புக்குள்ளாகி இறந்த கோழிகளை வளர்த்த பண்ணைகளை சுற்றிலும் ஒரு கி.மீ. தொலைவுக்கு பறவைக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



தமிழகத்தை பொறுத்தவரை, நாமக்கல் மண்டலத்தில் 1,100 பண்ணைகளில் 8 கோடி முட்டைக் கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. கறிக்கோழி வளர்ப்பு பண்ணைகள் குறைவான எண்ணிக்கையிலேயே உள்ளன. வழக்கமாக, ஆந்திரம், கேரளம் உள்ளிட்ட பிற மாநிலங்களில் பறவைக் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டால் நாமக்கல் மண்டலத்தில் கோழிப் பண்ணைகளில் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்படும். தற்போது, தமிழகத்திற்குள் பறவைக் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் கோழிப் பண்ணையாளர்கள் அச்சமடைந்துள்ளனர்.

தங்களுடைய பண்ணைகளில் நோய் பரவாமல் சுகாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர். பண்ணைகளுக்குள் வெளியாட்களை அனுமதிப்பதில்லை. ஊழியர்களின் கை, கால்களில் நுழைவாயிலிலேயே கிருமிநாசினி தெளித்து அனுப்புகின்றனர். வாகனங்கள் முழுவதுமாக கிருமிநாசினி தெளிக்கப்படுகிறது. கோழிப் பண்ணையை சுற்றிலும் பறவைகள் ஏதேனும் பறந்தால் அவற்றை வெடிவைத்து விரட்டும் முயற்சியும் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக முட்டைவிலை அதிகரித்த வண்ணம் இருந்தது.

பறவைக் காய்ச்சல் பரபரப்பால் மீண்டும் சரிய தொடங்கியுள்ளது. தமிழகத்தில் இதுவரை கோழிகளுக்கு பறவைக் காய்ச்சல் ஏற்பட்டது இல்லை. தற்போது முதல்முறையாக கறிக்கோழிப் பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் முட்டைக் கோழி வளர்ப்போர் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கச் செயலாளர் கே.சுந்தரராஜன் கூறியதாவது:

தமிழகத்தில் பறவைக் காய்ச்சல் பாதிப்பு என்பது கடந்த ஆண்டு சென்னையில் காகங்களுக்கு ஏற்பட்டது. கோழிகளுக்கு இதுவரை ஏற்பட்டதில்லை. கடலூர் மாவட்டத்தில் நிகழ்ந்த கோழிகள் இறப்பு, பறவைக் காய்ச்சல் பாதிப்பு என தெரியவந்துள்ளது. கறிக்கோழி வளர்ப்பு என்பது தரையில் வைத்து வளர்க்கப்படுவது, அதனால் பறவைகள் மூலம் எளிதாக நோய் தொற்று ஏற்படலாம். ஆனால் முட்டைக் கோழிகளை பொருத்தமட்டில் நாங்கள் கூண்டில் வைத்து வளர்க்கிறோம். அதுமட்டுமின்றி, கால்நடைத் துறையினரின் அறிவுறுத்தல்படி நோய் தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். ஊழியர்கள், வாகனங்கள் அனைத்தும் கிருமி நாசினி தெளித்த பிறகுதான் பண்ணைக்குள் அனுமதிக்கப்படுகின்றன.

நாமக்கல் மண்டலத்தில் உள்ள பெரும்பாலான கோழிப் பண்ணைகள் 100 சதவீதம் நோய் தடுப்புக்கான பாதுகாப்பு வசதிகளை கொண்டுள்ளன. அதனால் பறவைக் காய்ச்சல் வர வாய்ப்பில்லை. இருப்பினும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம் என்றார்.

## நீட் தேர்வு முறையை மறு ஆய்வு செய்வது அவசியம்: அன்புமணி



**சென்னை, நவ. 14:** நீட் தேர்வால் முதல் முயற்சியில் எம்பிபிஎஸ் சேருவோர் எண்ணிக்கை 5 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளதால், அந்தத் தேர்வு முறையை மறுஆய்வு செய்ய வேண்டிய அவசியம் என பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் கலந்தாய்வு மூலம் மருத்துவப் படிப்பில் சேர்ந்த மாணவர்கள் எத்தனை முறை நீட் தேர்வு எழுதினர் என்பது தொடர்பாக வெளியான செய்திகள் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளன. 2025-26- ஆம் கல்வி ஆண்டில் அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கான 7.5 சதவீத இடஒதுக்கீட்டில், மருத்துவப் படிப்பில் சேர்ந்த 650 மாணவர்களில் 33 பேர் மட்டுமே நீட் தேர்வில் முதல் முயற்சியில் போதிய மதிப்பெண் பெற்றவர்களாவர். மீதமுள்ள 95 சதவீதம் பேர் 2, 3, 4, 5 முறைகளுக்கும் மேல் நீட் தேர்வு எழுதி மருத்துவப் படிப்பில் சேர்ந்துள்ளனர் என அரசு வெளியிட்ட தரவுகள் கூறுகின்றன.

மருத்துவக் கல்வியை தரமானதாகவும், அனைவருக்குமானதாகவும் மாற்ற வேண்டியது அவசியமாகும். அதற்காக நீட் தேர்வின் தாக்கம் குறித்து ஆய்வு செய்து அதை ரத்து செய்தல், மருத்துவக் கல்விக்கான கட்டணத்தை ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு கட்டுப்படியாகும் வகையில் குறைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மத்திய அரசும், மாநில அரசுகளும் இணைந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று தெரிவித்துள்ளார் அன்புமணி.

## சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை: இளைஞருக்கு 45 ஆண்டுகள் சிறை

**நாமக்கல், நவ. 14:** பள்ளிபாளையம் அருகே சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் இளைஞருக்கு 45 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நாமக்கல் மகளிர் விரைவு நீதிமன்றம் வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் அருகேயுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த 16 வயது சிறுமி, அங்குள்ள அரசுப் பள்ளியில் 8 ஆம் வகுப்பு வரை படித்துவிட்டு வீட்டில் இருந்துள்ளார்.

இந்த நிலையில் சிறுமிக்கு அடிக்கடி வயிற்று வலி ஏற்பட்டது. இதையடுத்து, படைவீடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிறுமியை அழைத்துச் சென்று அவரது பெற்றோர் பரிசோதனை செய்ததில் சிறுமி 6 மாத கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது. இதனால், அதிர்ச்சியடைந்த பெற்றோர், அச்சிறுமியிடம் விசாரித்தனர்.

அப்போது, வெப்படையைச் சேர்ந்த சுந்தரராஜன் மகன் ஸ்ரீதர் (25) என்பவர் சிறுமியை பலமுறை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியது தெரியவந்தது.

இதுகுறித்து, திருச்செங்கோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் போலீஸார் வழக்குப் பதிவுசெய்து கடந்த 2020, டிச.14 இல் ஸ்ரீதரை கைது செய்தனர். இந்த வழக்கு நாமக்கல் மகளிர் விரைவு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இதில் விசாரணை வெள்ளிக்கிழமை நிறைவடைந்த நிலையில், குற்றம் சாட்டப்பட்ட ஸ்ரீதருக்கு பல்வேறு பிரிவுகளில், 45 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.11 ஆயிரம் அபராதமும், சிறைத் தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி எழில்வேலவன் தீர்ப்பளித்தார்.

## திருப்பரங்குன்றம் மலையை தொல்லியல் துறையிடம் ஒப்படைக்கக் கூடாது



**சென்னை, நவ. 14:** திருப்பரங்குன்றம் மலை மற்றும் முருகன் கோயிலை தொல்லியல் துறையிடம் ஒப்படைக்கக் கூடாது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

உயர்நீதிமன்ற மதுரை அமர்வில், ஹிந்துத்துவ கருத்தியலும், மதச்சார்பு உணர்வும் கொண்ட ஒருவர் தாக்கல் செய்த பொதுநல மனுவில், திருப்பரங்குன்றம் மலை மற்றும் முருகன் கோயிலை இந்திய தொல்லியல் துறையிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. திருப்பரங்குன்றம் பிரச்னையில் தமிழ்நாடு அரசு முந்தைய ஆட்சியிலும், தற்போதைய ஆட்சியிலும் உறுதியான நிலைபாட்டை எடுத்து செயல்பட்டு வருகிறது.

இந்த நிலையில், திருப்பரங்குன்றம் மலையை தொல்லியல் துறை வசம் ஒப்படைக்கக் கோரும் வழக்கு மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில் நவ.17- ஆம் தேதி விசாரனைக்கு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த வழக்கில் தமிழ்நாடு அரசின் கொள்கை நிலையில் உறுதியாக நின்று, வலுவான வாதங்களை முன்வைத்து, திருப்பரங்குன்றம் மலை மற்றும் முருகன் கோயிலை தமிழ்நாடு அரசின் பொறுப்பில் இருந்து, விலக்கி, கொண்டுசெல்ல நடைபெறும் சூழ்ச்சியை முறியடிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் மு.வீரபாண்டியன்.

உயர்நீதிமன்ற அலுவல் மொழியாக தமிழ்

## பேரவைத் தீர்மானத்தை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப உத்தரவிடக் கோரி பாமக மனு

**சென்னை, நவ. 14:** உயர்நீதிமன்ற அலுவல் மொழியாக தமிழை அறிவிக்கக் கோரி தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் பாமக மனு தாக்கல் செய்துள்ளது.

இதுதொடர்பாக அந்தக் கட்சியின் மாநில பொதுச் செயலர் வடிவேல் ராவணன் தாக்கல் செய்துள்ள மனுவில், சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வலியுறுத்தி, தமிழக சட்டப்பேரவையில் கடந்த 2006 மற்றும் 2026-ஆம் ஆண்டு செப்டம்பரில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தத் தீர்மானங்களை குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க உத்தரவிட வேண்டும்.

கடந்த 2006-ஆம் ஆண்டு தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆளுநர் பரிந்துரையுடன், மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், கடந்த 1965-ஆம் ஆண்டு மத்திய அமைச்சரவை முடிவின் அடிப்படையில், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியின் கருத்தின்படி, தீர்மானத்தின் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 348(2) பிரிவின்படி, குடியரசுத் தலைவர் ஒப்புதலுடன் மாநில ஆளுநர் உயர்நீதிமன்றங்களில், ஹிந்தி அல்லது மாநில மொழிகளை வழக்காடு மொழிகளாக அங்கீகரிக்க வழிவகை செய்கிறது. எனவே, கடந்த 2006-ஆம் ஆண்டு தீர்மானத்தையும், கடந்த செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க உத்தரவிட வேண்டும் என மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த மனு தலைமை நீதிபதி விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது. இதே கோரிக்கையுடன் சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர்கள் சங்கமும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சாலை அமைக்கும் பணியில் முறைகேடு

## கேள்வி எழுப்பிய சட்டக் கல்லூரி மாணவர் உள்பட மூவருக்கு எதிரான வழக்கு ரத்து

**சென்னை, நவ. 14:** சாலை அமைக்கும் பணியில் நடந்த முறைகேடு குறித்து கேள்வி எழுப்பியதற்காக சட்டக் கல்லூரி மாணவர் உள்பட மூன்று பேருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சென்னை உயர்நீதிமன்றத்தில், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த தரீஷ் பழனிசாமி, துரை சாமி முத்துகிருஷ்ணன், ஆறுமுகம் ஆகியோர் தாக்கல் செய்த மனுவில், சாலை அமைக்கும் பணியில் நடைபெற்ற முறைகேடு குறித்து கேள்வி எழுப்பிய தற்காக, காவல் துறை அதிகாரிகளைத் தாக்க முயன்றதாகவும், அவர்களைப் பணி செய்யவிடாமல் தடுத்ததாகவும் தங்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ள பொய் வழக்கை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரியிருந்தனர்.

இந்த வழக்கு நீதிபதி ஜி.கே. இளந்திரையன் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் அசன் முகமது ஜின்னா, சாலை அமைக்கும் பணியில் நடந்த முறைகேட்டை எதிர்த்துக் கேள்வி எழுப்பியவர்களை காவல் நிலையம் அழைத்து வந்தது குறித்து வழக்குரைஞர் சரிதா கேள்வி எழுப்பினார். அங்கு நடந்த நிகழ்வுகளை சரிதாவின் மகனும், சட்டக் கல்லூரி மாணவருமான தரீஷ் பழனிசாமி, தனது கைப்பேசியில் விடியோ பதிவு செய்துள்ளார்.

அவரது கைப்பேசியைப் பறித்த உதவி ஆய்வாளர் மற்றும் போலீஸாரை பணிசெய்ய விடாமல் தடுத்ததாகவும், தாக்க முயன்றதாகவும் மூவர் மீதும் நாமக்கல் போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளதாகக் கூறி, விடியோ ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இதையடுத்து, வழக்கு தொடர்பான ஆவணங்களையும், விடியோ காட்சிகளையும் பரிசீலித்த நீதிபதி, காவல் நிலையத்துக்குள் போலீஸ் அதிகாரியைத் தாக்க முயன்றதாக சட்டக் கல்லூரி மாணவர் உள்ளிட்ட மூவர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டார்.


### பொது அறிவிப்பு

**திருமதி. அலமேலு க/பெ. ஞானசேகர்,** (ஆதார் அட்டை எண். 4133 1713 3708) கதவு எண்-19, சின்னமனலி கிழக்கு, எடப்பாடி, சேலம்-637101, அவர்களின் தகவல் பெற்று தெரிவிக்கும் அறிவிப்பு என்னவென்றால்,

மேற்கண்ட எமது கட்சிக்காரர் கடந்த 03.10.2026-ம் தேதியில் காலை சுமார் 10.00 மணி அளவில் எடப்பாடி பேருந்து நிலையம் அருகில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் கிரைய ஆவண எண். 3124/2011 பத்திரத்தை ஜெராக்ஸ் எடுக்க செல்லும் பொழுது தொலைந்துவிட்டது. பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. எனவே மேற்படி கிரைய ஆவணத்தை யாரேனும் கிடைக்கப்பெற்றால் எமது கீழ்க்கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

**N.VINAYAGARAJ, B.A.L.L.B., Advocate**
120/69, கடை எண்-2, பெரமனூர் மெயின்ரோடு, சேலம்-7 கைபேசி எண் : 9626361663

**DhanlaxmiBank** established 1927
தனலக்ஷ்மி பேங்க் லிட்.,
எண்.270, பாரதி வீதி, கவர்னபுரி,
சேலம் - 636 004, போன் : 0427-2441003
பிறந்திய அலுவலகம் : சென்னை கார்பொரேட் அலுவலகம் : திருச்சூர்

**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான, விற்பனை அறிவிப்பு**
**பிரசேர்க்கை -IV-A (நான்காம் நிபந்தனைகளின் விதி 8(6))**

கடனீட்டு சொத்துக்கள் நெருக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

**தனலக்ஷ்மி வங்கி லிட்.,** -ன் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கி, **சேலம் கிளைக்கு** வரவேண்டிய தொகை **31.10.2026** வரை, **ரூ.30,46,537.08 (ரூபாய் மூப்பது லட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து ஐநூற்று முப்பத்து ஏழு மற்றும் பைசா எட்டு மட்டும்)** மற்றும் **01.11.2026** தேதியிலிருந்து மாதாந்திர கணக்கீட்டிலான வட்டி, தொகை திரும்ப செலுத்தும் நாள்வரையான செலவுகள், கட்டணங்களுடன், **1. M/s.பத்மநாபன் கன்ஸ்ட்ரக்ஷன், உரிமையாளர் : திரு.பத்மநாபன்.G,** கதவு எண்.47/21A, மூங்கப்பாடி வீதி, குகை, சேலம் - 636 006, **2. திரு.பத்மநாபன்.G,** த/பெசோவிந்தசாமி, கதவு எண்.47/21A, மூங்கப்பாடி வீதி, குகை, சேலம் - 636 006 மற்றும் **3. திருமதி.லலிதா.P,** க/பெ. திரு.பத்மநாபன்.G, கதவு எண்.47/21A, மூங்கப்பாடி வீதி, குகை, சேலம் - 636 006 என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்கு பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட **ஆக்கபூர்வ/கொள்நிலை (Constructive/Physical) சுவாதீனம்** செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை **07.12.2026 (நிகழ் கிழமை)** தேதியன்று விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்குள்ளதோ உள்ள நிலையில்' 'என்ன உள்ளதோ அப்படியே' மற்றும் 'எப்படி உள்ளதோ உள்ளபடி' என்கிற அடிப்படையில் விற்கப்படும்.

சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை **ரூ.76,20,000/- (ரூபாய் எழுபத்து ஆறு லட்சத்து இருபதாயிரம் மட்டும்)** முன் வைப்புத் தொகை (EMD) **ரூ.7,62,000/- (ரூபாய் ஏழு லட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்)** என்பதாகும்.

சொத்தின் விவரம்

**இனம் எண்.1 :** நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலுகா, காக்காவேரி கிராம பழைய சர்வே எண்.165/1, புதிய சர்வே எண்.165/1E1பில் பட்டா எண்.1554ன்படி உள்ளதுமான 42.50 சென்ட் காலி நிலத்தின் **எல்லைகள்-1 :** வடக்கு : 20 அடி அகல கிழமேல் ரோடு, தெற்கு : வருதராஜ் சொத்து, கிழக்கு : ஃப்ளோரி மற்றும் எபிசேரின் மீது சொத்து, மேற்கு : கீழே குறிப்பிட்ட இனம் எண்.2 சொத்து.

**இனம் எண்.2 :** நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலுகா, காக்காவேரி கிராம பழைய சர்வே எண்.165/1, புதிய சர்வே எண்.165/1E1பில் பட்டா எண்.1466ன்படி உள்ளதுமான 7.50 சென்ட் காலி நிலத்தின் **எல்லைகள்-2 :** தெற்கு : சர்வே எண்.165/2ல் உள்ள வருதராஜ் நிலங்கள், வடக்கு : 20 அடி அகல கிழமேல் ரோடு, மேற்கு : பால் எட்வர்டு கிறிஸ்டியனின் சொத்து, கிழக்கு : சர்வே எண்.165/1E (ஈவது இனச் சொத்தில் உள்ள 42.50 சென்ட் நிலம். ஆகமொத்தம் 42.50 + 7.50 = 50.00 சென்ட் நிலத்துடன் அனைத்து பொது தடவழிகளிலும் லேஅவுட் ரோடுகளிலுமான உபயோக உரிமையுடன் பிற அனைத்து இணைப்புகளும் சேர்ந்த சொத்து. மேற்படி சொத்து வழித்தட உரிமைகள் மற்றும் பிற வசதிகளுடன் கூடியது.

**தெரியவந்த வில்லங்க விவரம் : Nil.**

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு தனலக்ஷ்மி வங்கியின் இணையதளத்தின் 'லிங்க்கில்' பார்வையிடலாம். www.dhanbank.in

தேதி : 13.11.2026
இடம் : சேலம்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
தனலக்ஷ்மி வங்கி லிட்.


நல்லம்பள்ளி அருகே

# 25 ஹெக்டேரில் பெருங்கற்கால கல்வட்டங்கள்

பாதுகாப்பு வேலி அமைக்கும் பணி தீவிரம்

**தருமபுரி, நவ. 14:** தருமபுரி மாவட்டம், பங்குநத்தத்தில் சுமார் 24.85 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள பெருங்கற்கால ஈமச் சின்னங்களைப் பாதுகாக்கும் பணிகளை விரைந்து முடித்து, அப்பகுதியை தொல்லியல் சுற்றுலாத் தலமாக மேம்படுத்த வேண்டும் என வரலாற்று ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நல்லம்பள்ளி வட்டத்தில் பென்னாகரம் செல்லும் பிரதான சாலையையொட்டி பங்குநத்தம் கிராமம் அமைந்துள்ளது. இங்குள்ள இரு சிறிய மலைக்குன்றுகளிலும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த ஈமச் சின்னங்களான கல்வட்டங்கள் நூற்றுக்கணக்கில் காணப்படுகின்றன.

சுமார் 24.85 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த கல்வட்டங்கள் 10 முதல் 20 அடி வரை விட்டம் கொண்டவை. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியில் இறந்தவர்களை அடக்கம் செய்த இடங்களை அடையாளப்படுத்தும் வகையில், புதைக்கப்பட்ட இடத்தைச் சுற்றிலும் பெரிய, சிறிய பாறைக் கற்களை வட்ட வடிவில் அடுக்கி இவை அமைக்கப்பட்டுள்ளன.

பங்குநத்தம் பகுதியில் வரலாற்று ஆய்வாளர்களும் தொல்லியல் துறையினரும் மேற்கொண்ட ஆய்வுகளில், இக்கல்வட்டங்களின் வரலாற்று முக்கியத்துவம் உறுதிசெய்யப்பட்டது. இதையடுத்து, அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன. இதைப் பரிசீலித்த தொல்லியல் துறை, கல்வட்டங்கள் அமைந்துள்ள பகுதியைப் பாதுகாக்க முடிவு செய்தது.

அதன்படி, இப்பகுதியைப் புராதனச் சின்னங்கள் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட பகுதியாகத் தொல்லியல் துறை சில ஆண்டுகளுக்கு முன்பு அறிவித்தது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நில அளவீட்டில், சுமார் 24.85 ஹெக்டேர் பரப்பளவில் கல்வட்டங்கள் அமைந்திருப்பது கண்டறியப்பட்டது. இதில், உள்ளூர் மக்களின் பயன்பாட்டில் இருந்த நிலங்களும் மீட்கப்பட்டன.

தற்போது, பாதுகாக்கப்பட்ட பகுதி என்பதை உறுதிசெய்யும் வகையில் தமிழகத் தொல்லியல் துறை சார்பில் பல்வேறு இடங்களில் அறிவிப்புப் பலகைகள் நிறுவப்பட்டுள்ளன. வெளிநபர்களின் நடமாட்டத்தைத் தடுக்கும் வகையில், இப்பகுதியைச் சுற்றி அடிமட்டச் சுற்றுச்சுவர் அமைத்து, அதன்மீது 5 அடி உயரத்தில் இரும்புக் கம்பிவேலி அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

தருமபுரி மாவட்டத்தின் முக்கிய சுற்றுலாத் தலமான ஒகேனக்கல் செல்லும் சாலையில் பங்குநத்தம் அமைந்துள்ளதால், இப்பகுதியைத் தொல்லியல் சுற்றுலாத் தலமாக மேம்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது. இதற்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் பார்வையாளர் வசதிகளையும் ஏற்படுத்தினால், ஒகேனக்கல்லுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் வழியிலேயே இந்தப் பழைமையான ஈமச் சின்னங்களையும் பார்வையிட வாய்ப்பு ஏற்படும் என வரலாற்று ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து தொல்லியல் துறையினர் கூறியதாவது:

தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிக்கு ஏற்ப சுற்றுச்சுவர் மற்றும் இரும்புக் கம்பி வேலி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பகுதியில் துறை சார்பில் ஒரு காவலரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வட்டங்கள் அமைந்துள்ள இரு குன்றுகளுக்கும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் சென்று வருவதற்காக முதல்கட்டமாக மண் மற்றும் கற்களைக் கொண்டு சாலைகள் அமைக்கப்பட உள்ளன. இப்பகுதியிலிருந்து கற்கள், மண் மற்றும் தாவரங்களை யாரும் வெட்டி எடுத்துச் செல்ல முடியாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஐந்தாண்டுகளில் இப்பகுதிக்குத் தேவையான முழுமையான பாதுகாப்பு வசதிகளைப் படிப்படியாக ஏற்படுத்தத் திட்டமிட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அடுத்தடுத்து ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு, மொத்தப் பரப்பை சுற்றிலும் சுற்றுச்சுவருடன் கூடிய இரும்புக் கம்பிவேலி அமைக்கப்படும்.

பணிகள் நிறைவடைந்த பின்னர், பொதுமக்கள் இப்பகுதிக்குச் சென்று பார்வையிடுவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்படும் என்றனர்.

பொதுமக்கள் பார்வையிடவும் வாய்ப்பு!





கல் வட்டங்கள் அமைந்துள்ள பகுதியை பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்து தொல்லியல் துறை சார்பில் வைக்கப்பட்டுள்ள அறிவிப்பு பலகை. (வலது) பங்குநத்தம் கிராமத்தில் காணப்படும் பெருங்கற்கால கல்வட்டங்கள்.